மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, ஆடு மானியம் கொடுப்பதற்கும் இந்த மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. எனினும் ஆடு வளர்ப்பதற்காக நல்ல பொலியாடுகளை உற்பத்தி செய்வது இந்த ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கமாகும்.

உரத்திற்கு மத்திய அரசின் உதவித் தொகை.

வினா எண் 342— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதுவரை மத்திய அரசு உரத்திற்காக டன் ஒன்றுக்கு எவ்வளவு உதவித் தொகை அளித்து வந்தது?

(ஆ) அதை நிறுத்தியதற்கு என்ன காரணம்?

(இ) இந்த உதவித் தொகையை மீண்டும்பெற மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) உதவித் தொகை ஏதும் மத்திய அரசு அளிக்கவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, உரத்திற்கான பூல் பிரைஸ், ரிடெயில் பிரைஸ், மற்றும் மார்ஜினல் பிரைஸ் ஆகியவற்றை மத்திய அரசே நிர்ணயிக்கிறது. இப்படி விலை நிர்ணயிக்கிற முழு அதிகாரத்தையும் மத்திய அரசு வைத்திருக்கிறது. நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமுமாக உர விலை ஏறிக்கொண்டு போவதால், விவசாய மக்கள்—இந்த அரசுதான், இன்றைக்கு இங்கேயிருக்கும் அரசுதான்—அதற்குப் பொறுப்பு என்று ஆங்காங்கு பேசிக்கொண்டு இருக்கிறார்கள். விலை நிர்ணயம் செய்கிற அதிகாரம் மத்திய அரசுக்கு இருந்தபோதிலும், மாநில அரசு அதைக் குறைத்து விவசாய மக்களுக்குக் கொடுக்க ஏதாவது வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உர விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்திய அரசின் பொறுப்பாக இருக்கிறது. அது 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாள் அன்று அதிகமான அளவிற்கு உரவிலையை உயர்த்தி இருக்கிறது. இந்த விலை உயர்வு உணவு உற்பத்தியைப் பாதிக்கும் என்பதைச் சொல்லி இருக்கிறோம். விவசாயிகளின் இடுபொருள்களுக்கு விலையிலே ஒரு பகுதியை மானியமாகக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டு இருக்கிறோம் பதில் வரவில்லை. சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தில் இது போன்ற உரங்கள் பெறுவதற்கு மானியம் கொடுக்கப் படுகிறது. அதை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்கின்றன.

1981 மார்ச் 3]

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மத்திய அரசு உதவித் தொகை கொடுக்கவில்லை என்று கனம் அமைச்சர் கூறினார். ஆனால், அதே சமயத்தில் மத்திய அரசு சமீபத்தில் உரத்திற்குப் பிரதானமாக இருக்கிற நாப்தாவின் விலையை பயங்கரமாக ஏற்றி, விவசாயிகளுடைய உற்பத்திச் செலவை இன்னும் அதிகரித்திருக்கிறார்கள். இங்கே இப்படி இருக்கிறது. ஆனால் மறு பக்கத்தில் கம்பெனிகளைப் பொறுத்தவரையிலே முதலாளிகளுக்கு கன்செஷன் கொடுக்கிறார்கள். இந்தக் கொள்கையினால் தமிழ்நாட்டிலே பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு உதவி செய்ய மத்திய அரசிடம் ப்ரொப்போசல் கொடுத்ததாகச் சொன்னார்கள். அப்படியானால் கான்கிரீட்டாக ஏதாவது ப்ரொப்போசல்ஸ் கொடுதிருக்கிறீர்களா? ரெமூனரேட்டிவ் பிரைஸ் வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ந் தேதியில் பல்வேறு உரங்களின் விலை அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. யூரியா 1,450 ரூபாயிலிருந்து 2,000 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. டை அமோனியம் 2,200 ரூபாயிலிருந்து 3,500 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. இதைப்போன்று 19 உரங்களின் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொல்லித்தான் மானியம் கேட்டிருக்கிறோம். ஆனால் பதில் வரவில்லை. மீண்டும் இவைகளைக் குறிப்பிட்டுக் காட்டி எழுத அரசு தயாராக இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, இந்த இரசாயன உரங்களின் விலையை உயர்த்துவதற்கு முன்னால் மத்திய அரசு மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா? இதுவரை மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்தாலோசித்துதான் இரசாயன உரங்களின் விலையை முடிவு செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, உரத்தினுடைய விலையை மத்திய அரசு நிர்ணயிக்கும்போது மாநில அரசுகளை கலந்தாலோசிப்பது இல்லை; கருத்து கேட்பதில்லை. நாம் ஏற்பட்டுள்ள முழு பாதிப்புகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ந் தேதியில் யூரியா விலையை உயர்த்தியதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ந் தேதி அன்று வடாற்காடு மாவட்டம், காட்பாடியில் காந்திநகரிலுள்ள உரக் கிடங்கிலிருந்து அதன் மேலாளர் 40 டன் யூரியாவை பிளாக் மார்க்கெட்டிலே விற்று 22,000 ரூபாயை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இது சம்பந்த

மாக நான் புகார் கொடுத்திருக்கிறேன். இதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அதே நேரத்தில் 82 டன் யூரியாவை ஏற்றிச் சென்ற 3 லாரிகளை 'சீஸ்' பண்ணியிருக்கிறார்கள். அது என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மாநில அரசுகளை கேட்கமலேயே மத்திய அரசு உரத்தின் விலையை உயர்த்துவதாகச் சொன்னார்கள். அதைப் போன்று தானிய விலைகளை நிர்ணயிக்கும்போதும் மத்திய அரசு மாநில அரசுகளை கேட்டுச் செய்கிறதா அல்லது கேட்காமலே செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, கேள்வி உர விலை பற்றியது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமானது. விவசாய இடுபொருள் விலை உயர்வினால் உற்பத்திச் செலவு கூடி, விவசாயிகள் தங்களுக்குக் கட்டுப்படி ஆகாமல் போராட்டம் நடத்துகிற காலம் அதே சமயத்தில் வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் பொருள் விலை ஏறிவிட்டது என்று மக்கள் வேதனைப்படும் காலம் இது. ஆகவே, மத்திய அரசு மாநில அரசை கலந்து விலையை நிர்ணயம் செய்யாமல் இருந்தாலும், தற்போது ஆலை வாயில் விலையைவிட பெருமளவுக்கு கூடுதலாக இருக்கிறதே; இந்த விலையை ஆலை வாயில் விலையைவிட உயர்த்தாமல் விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைக்க மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்துமா? உரத்திற்கு மத்திய அரசு விதிக்கும் வரியை கைவிடும்படி வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அரசு பரிசீலிக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த உரத்தினுடைய விலை ஏறி இருக்கிற காரணத்தால் விவசாயிகள் அல்லல்படுவது மட்டுமல்லாமல் உற்பத்தியாகிற உணவு தானியங்கள் விலையும் ஏறிவிடுகிற காரணத்தால் ஏறிய விலையை மட்டும் தமிழக அரசு மானியமாக ஏற்று விவசாயிகளுக்கு உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரையில் முழு மானியம் கொடுக்கின்ற அளவுக்கு நிலைமை இல்லை.

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

[1981 மார்ச் 3]

[முற்பகல் 9-30]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு உரத்திற்கு மானியம் அளிக்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசு வேறு எந்த மாநிலத்திற்காவது உரத்திற்கு மானியம் அளிக்கின்றதா? அப்படி என்றால் அதைக் காரணம் காட்டி தமிழகத்திற்கும் மானியம் அளிக்க வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அதைப்பற்றிய தகவல் இல்லை. ஆனால் உர விலையை உயர்த்தினால் உற்பத்திச் செலவு அதிகமாக ஆகும் என்பதை எடுத்துச் சொல்லி விவசாய விளைபொருள் விலை நிர்ணயிப்புக் குழுவிலே நெல், கரும்பு போன்றவைகளுக்கு நிர்ணயிக்கின்ற விலையை அதிகமாக்கித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, அகில உலக ரீதியிலே பெட்ரோலியம் ப்ராட்க்ட்ஸ் விலை அதிகமாகி விட்ட காரணத்தாலேதான் மத்திய அரசு உரத்தினுடைய விலையை உயர்த்த வேண்டி இருக்கிறது என்பதை இந்த அரசு உணருகிறதா? . . . . (குறுக்கீடு) . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி உறுப்பினர்களுக்குள் பேசிக்கொண்டிருந்தால் அவையை ஒழுங்காக நடத்த முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசும் மாநில அரசும் மானியம் வழங்குகின்றது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு வழங்குகின்ற மானியத் தொகை எவ்வளவு என்ற விவரம் அமைச்சர் அவர்களிடமிருந்தால் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பாதிப்பாதி.

விவசாய உபயோகத்திற்கு சிமெண்ட் களம் அமைத்தல்.

*வினா எண். 343—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக விவசாய மான்யத்தில் விவசாயிகள் உபயோகத்திற்கு சிமெண்ட் களம் அமைக்கும் திட்டம் நிறுத்தி வைக்கப்படுள்ளதா?